

பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 73

28.08.2026

லஞ்சம் கேட்டு பெற்ற காவல் ஆய்வாளருக்கு 2 ஆண்டுகள் சிறை

புகார்தாரர் திரு.திருநாவுக்கரசு, ஒரு வழக்கறிஞர். அவர் தன்னுடைய மைத்துனர் தொடர்பான குற்ற வழக்கு எண். 494/2008ல் குற்றப்பத்திரிக்கை விரைவாக தாக்கல் செய்ய திரு.ஜோசப் சிரில், காவல் ஆய்வாளர், அப்போதைய பெரம்பலூர் காவல் நிலையம், தற்போது நக்ஸல் சிறப்பு பிரிவு, கன்னியாகுமரி மாவட்டம் அவர்களிடம் அணுகியபோது திரு.ஜோசப் சிரில், காவல் ஆய்வாளர் தனக்கு ரூ.7,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருச்சி பிரிவில் அளித்த புகாரின்பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கை கடந்த 26.08.2008 அன்று மேற்கொள்ளப்பட்டது. பொறிவைப்பு நடவடிக்கையின்போது திரு.ஜோசப் சிரில், காவல் ஆய்வாளர் அவர்கள் லஞ்சபணம் ரூ.7,,000/- பெற்றபோது கைது செய்யப்பட்டார். இவ்வழக்கானது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம்,, பெரம்பலூர் மாவட்டத்தில் வழக்கு நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் இன்று 28.08.2026ந் - தேதி திரு.ஜோசப் சிரில், காவல் ஆய்வாளருக்கு 2 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் மற்றும் ரூ.2,000/- அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

PRESS RELEASE – 73
28.08.2026

INSPECTOR OF POLICE, CONVICTED IN BRIBE CASE

The complainant, Tr. Thirunavukarasu, is a lawyer. He had approached Tr.Joseph Cyril, Inspector of Police, Perambalur P.S., Perambalur District now NSD Wing, Kanyakumari District for laying charge sheet expeditiously in Perambalur Cr.no. 494/2008, involving his brother-in-law. Tr.Joseph Cyril, Inspector of Police demanded Rs.7,000/- as bribe from the complainant for laying charge sheet quickly. Unwilling to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Trichy detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized. On 26.08.2008 Tr.Joseph Cyril, Inspector of Police, received the bribe amount of Rs.7,000/- from the complainant and was arrested. On completion of investigation, the case was charge sheeted against the accused. The case was tried before the Hon'ble Principal District Judge, Perambalur. Today 28.08.2028 the Principal District Judge Court, Perambalur pronounced the judgment against Tr.Joseph Cyril, Inspector of Police, and sentenced him to undergo Rigorous Imprisonment for 2 years and fine of Rs.1000/- u/s 7 of PC Act,1988 and 2 years Rigorous imprisonment and fine of Rs.1000/- u/s 13(2) r/w 13(1)(d)(i) of PC Act, 1988 and ordered both sentences to run concurrently.